நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : STC /971/2025

வழக்கு சாட்சி : L.W.1 – PW .1

பெயர் : அமுதா

தந்தை பெயர் : ராமச்சந்திரன்

கிராமம் : தஞ்சாவூர்

வயது : 46/ 2026

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **01.06.2026**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை )

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் நாகூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக (1043) பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.05.2024 ம் தேதி 09.15 மணிக்கு வேதாரண்யம் மதுவிலக்கு அமல் பிரிவு ஆய்வாளர் பொறுப்பு நாகப்பட்டினம் மதுவிலக்கு அமல் பிரிவு ஆய்வாளர் திரு. சாமுவேல்ஞானம் அவர்களுடன் நானும், தலைமை காவலர் 127 ரமேஷ் என்பவரும் நாகப்பட்டினம் வெளிப்பாளையம் காவல் சரகம் பகுதியில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சென்ற போது சந்தேகத்திற்கு இடமாக வீட்டின் அருகில் நின்ற ஒரு நபர், பின்னர் விசாரித்து தெரியவந்த எதிரி பாண்டியம்மாள் , க /பெ. மூவேந்தர், அக்கரைகுளம், அண்ணா நகர், நாகப்பட்டினம் என்பவர் வெளிப்பாளையம் புதிய பேருந்து நிலையம் அருகே சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்தவரை, அவர் நின்ற இடத்தை சோதனை செய்த போது அங்கு பயணிகள் அமரும் கட்டை மறைவில் 30 லிட்டர் பிடிக்கக்கூடிய ஒரு பாலித்தீன் பையில் 20 லிட்டர் பாண்டி சாராயம் வைத்திருந்தவரை விசாரிக்க தன்னிடம் எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லை என்று கூறியவரை காவல் உதவி ஆய்வாளர் குற்றக் காரணம் கூறி 09.25 மணியளவில் எதிரியை கைது செய்தார். மேலும் பொதுமக்கள்

யாரும் முன்வராத காரணத்தினால், அன்றைய தினமே தடயத்திலிருந்து சுமார் 750 மிலி பிடிக்கக்கூடிய கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி வீதம் பாண்டி விஷத்தன்மையுள்ள சாராயத்தை எடுத்து SHO சீல் வைத்தும் எஞ்சிய தடயத்தை 09.35 மணிக்கு, மகசரில் கைப்பற்றி வேதாரண்யம் மதுவிலக்கு அமல் பிரிவு ஆய்வாளர் மற்றும் பொறுப்பு நாகப்பட்டினம் மதுவிலக்கு அமல் பிரிவு ஆய்வாளர் திரு. சாமுவேல்ஞானம் அவர்கள் தலைமை காவலர் 127 ரமேஷ் மற்றும் எனது முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். இந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1ஆவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மாதிரிக்கு எடுத்தது போக எஞ்சிய சாராயம் முழுவதையும் 09.45 மணிக்கு வேதாரண்யம் மதுவிலக்கு அமல் பிரிவு ஆய்வாளர் மற்றும் பொறுப்பு நாகப்பட்டினம் மதுவிலக்கு அமல் பிரிவு ஆய்வாளர் திரு. சாமுவேல்ஞானம் அவர்கள் தலைமை காவலர் 127 ரமேஷ் மற்றும் எனது முன்னிலையில் அழிப்பு மகசர் தயார் செய்து U/s 32 TNP Act 1937 ன் படி சம்பவ இடத்திலேயே பாலித்தீன் பையோடு கொட்டி அழித்து அழித்தல் மகசர் தயார் செய்தார். இந்த அழித்தல் மகசரில் உள்ள 1 ஆவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த அழித்தல் மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அன்றைய தினமே 11.00 மணிக்கு எதிரியை நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து எதிரி மீது மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலைய குற்ற எண் 388 /2024 U/s 4(1)(a) TNP Amentment Act 2024 ன் படி வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் பகுதி புதிய பேருந்து நிலையம் என்பதால் எந்த பேருந்தில் இருந்து தடயப்பொருட்களை கைப்பற்றினார்கள் போன்ற குறிப்புகள் சம்பந்தமாக உயர் அதிகாரிகள் விசாரிக்காமல் காவல் நிலையத்தில் தயாரித்த ஆவணங்களின் அடிப்படையில் தங்கள் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். தனிநபர்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால், தனிநபர் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழிப்பு மகஜர் ஆகிய ஆவணங்கள் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவதற்கு முன்பு தயார் செய்யப்பட்டவை என்றால் சரிதான். ஆனால், மேற்படி ஆவணங்களில் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரியிடம் இருந்து தடயப்பொருள் எதுவும் கைபற்றபடவில்லை என்றும், எதிரிக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.